திரு. வீ. மலைக்கண்ணன் அவர்கள் இளையான்குடி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ் அவர்கள் 1962 முதல் 1967 வரை குளச்சல் தொகுதியிலிருந்தும், 1971 முதல் 1976 வரை மற்றும் 1977 முதல் 1980 வரை இரண்டு முறை பத்மநாபபுரம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை மாவட்டத்தில், மதுரை மேற்கு தொகுதியிலிருந்து 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டு வரை சிறப்புற பணியாற்றியவரும், 2006 ஆம் ஆண்டில் அதே தொகுதியிலிருந்து இரண்டாம் முறையாக இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போதைய சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவையும், அன்பையும் பெற்றவரும், அரசின் திட்டங்களைத் தனது தொகுதி மக்களுக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, சீரிய முறையில் பணியாற்றியவருமான திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் 5–2–2007 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும்

கொள்கிறது. அவரது மறைவால், அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

முற்பகல் 9–35

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (23–3–2007) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS